1987 ஏப்ரல் 1]

தெலுங்கு சோழ நாட்டை கைப்பற்றினார்; அதோடு இலங்கைக்குச் சென்று அனுராதபுரத்தை அழித்து புலன்அருமை என்று சொல்லுகின்ற இடத்தில் சோழ பிரதிநிதியை தங்க வைத்தார். 196 அடி உயரம் உடைய அந்த பெரிய கோபுரத்தையும், நிழலே கீழே விழாத கோவிலையும் நிர்மாணித்தார்; நர்மதை கரையிலிருந்தே கல் எடுத்து வந்து லிங்கத்தையும், நந்தியையும் ஏற்பாடு செய்தார்; .. .. ..

Mr. SPEAKER: Are you taking history class?

திரு. குமரி அனந்தன் : தலைவர் அவர்களே, இந்தச் சிலை வைப்பதே பழம் பெருமையை நிலைநாட்டத்தான். அதை ஒரு மூலையில் போட்டுவிட்டு, அதனுடைய மூலத்தை சொல்லாமல் இருக்கக்கூடாது என்பதற்காகச் சொல்கிறேன். அவை எல்லாம் எழுதிவைக்கப்படுமா? அதன்மூலம் நமது பெருமை உலகத்தில் பரவ வழி ஏற்படுமா?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, ராஜராஜனுடைய புகழைப்பாடும் மெய்க் கீர்த்திகள் எழுதிவைக்கப்படும்.

திருவண்ணாமலை மாவட்டப் பதிவாளர் அலுவலகம்.

172—(*வினா எண் 5654) திரு. மு. பாண்டுரங்கன்: மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருவண்ணாமலை மாவட்டப் பதிவாளர் அலுவலகத்தை அரசு கட்டிடத்திற்கு மாற்றும் திட்டம் எந்நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை மாவட்டப் பதிவாளர் அலுவலகத்தை அரசு கட்டிடத்திற்கு மாற்ற தற்போது உத்தேசிக்கப்படவில்லை.

திரு. மு. பாண்டுரங்கன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இனிமேலாவது மாற்றுகின்ற உத்தேசம் இருக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே, மேற்படி கட்டிடம் கட்டுவதற்கு ரூபாய் 14.40 இலட்சம் தேவைப்படுகிறது. நிதிநிலை சரியானவுடன் அங்கு கட்டிடம் கட்டப்படும்.

செங்கற்பட்டு மாவட்டம் பழவேற்காட்டில் பறவைகள் சரணாலயம்.

173—(*வினா எண். 9105) திரு. கே. பி. கே. சேகர்: மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு மாவட்டம் பழவேற்காடு ஏரியில் பறவைகள் சரணாலயம் அமைக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) செங்கற்பட்டு மாவட்டம், பழவேற்காடு அருகில் உள்ள பழவேற்காடு ஏரி 1972 ஆம் ஆண்டு வனவிலங்கு (பாதுகாப்பு) சட்டத்தின் கீழ் பறவைகள் சரணாலயமாக அறிவிக்கை செய்யப்பட்டு உள்ளது. இச் சரணாலயத்தில் பறவைகளைப் பாதுகாக்கவும், ஏரியில் ஆக்கிரமிப்பைத் தடுக்கவும், ஒரு வனவரும் மற்றும் வனக் காவலரும் பணிபுரிகின்றனர்.

திரு. கே. பி. கே. சேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பறவைகள் சரணாலயத்திற்கு எந்தெந்த நாடுகளிலிருந்து பறவைகள் வருகின்றன? இந்த சரணாலயம் பற்றி பொதுமக்களுக்கு நன்கு விளக்குகின்ற வகையில் விளம்பரப் படுத்தப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு வி. வி. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே பழவேற்காடு பறவைகள் சரணாலயத்திற்கு சுமார் 102 வகைப் பறவைகள் பல நாடுகளிலிருந்து வருகின்றன. சுற்றுலா மையத்திற்கு வருகின்றவர்களுடைய கவனத்தை ஈர்க்கின்ற வகையில் விளம்பரப்படுத்தப்படுகின்றன.

தமிழகத்தில் வீடியோ தியேட்டர்கள்.

174—(*வினா எண் 13489) திரு. சைதை சா. துரைசாமி: மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் வீடியோ தியேட்டர்கள் கட்டுவதற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளதா?

(ஆ) ஆம் எனில், எந்தெந்த இடங்களில் அனுமதிக்கப் பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ): தமிழ் நாட்டில் வட ஆற்காடு மாவட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவரால் ஒரு வீடியோ தியேட்டர் கட்ட உரிமம் வழங்கப் பட்டுள்ளது. மற்ற மாவட்டங்களில் எவருக்கும் வீடியோ தியேட்டர் கட்ட உரிமம் வழங்கப்படவில்லை.

திரு. சைதை சா. துரைசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வீடியோ தியேட்டர் கட்டுவதற்கு வழங்கப்பட்டிருக்கின்ற அனுமதி எந்த அடிப்படையில் வழங்கப் பட்டிருக்கிறது? இதற்கு வரி விதிப்பு உண்டா? இன்றைக்கு மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி போன்றவைகளுக்கு எல்லாம் அந்தசமான வருவாயைத் தருவது திரை அரங்குகள் தான். அப்படி அந்த திரையரங்குகள் தருகின்ற வருவாயைப்